# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.11.2023 | தீபம் 17


# நூற்றாண்டு நிறைவு வைபவம்

## மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் சுசில் பிறேமஜெயந்த

## பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவின் நிறைவு வைபவம் 11.10.2023 புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.45 மணி வரை கலாசாலையில் அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் சுசில் பிரேமஜெயந்த அவர்களும் சிறப்பு விருந்தினராக கடல் தொழில் அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்களும் கௌரவ விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம்.என்.ரணசிங்க அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கலாசாலையின் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தி லிருந்து ஆறுமுகநாவலர், அருணாசல உபாத்தியாயர், சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன் அருணாசலம் உள்ளிட்ட பெரியார்களைப் போல வேடமணிந்த மழலைகள் விருந்தினர்களை அழைத்து வந்தனர்.

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியால யத்தை சேர்ந்த இருபதிற்கும் மேற்பட்ட தரம் இரண்டைச் சேர்ந்த மாணவர்கள் கலாசாலை தொடங்குவதற்கு அடித்தளமிட்ட பெரியோர்களது வேடம் தாங்கி வருகை தந்திருந்தனர். இது அவர்கள் வானத்தில் இருந்து இறங்கி வந்து ஆசி தருவதை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

தேசிய கொடியேற்றலுடன் வரவேற்பு ஊர்வலம் மண்டபத்தை சென்றடைந்தது.

கலாசாலையின் நூற்றாண்டு மலர் வெளியீடு இடம் பெற்றது இதன் வெளியீட்டு உரையினை கலைமலர் ஆசிரியர் விரிவுரையாளர் திரு கு.பால சண்முகன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கலைமலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் பிரதிகளை அதிபர் அமைச்சர்கள் இருவருக்கும் கையளித்தார்.

அதனை அடுத்து கல்வி அமைச்சர் முதல் பிரதியை வெளியிட்டு வைத்தார். அதனை கலாசாலையின் பழைய மாணவியும் நீர்வேலி கரந்தன் இராமுபிள்ளை வித்தியாலய அதிபருமாகிய திருமதி சாந்தினி வாகீசன் பெற்றுக் கொண்டார். ஓய்வுநிலை அதிபர்களும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ச்சி ⟹ 16 பக்.

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.



**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## வடக்கின் ஆசிரியர் கலாசாலைகள் ~ சிறப்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய ஆய்வுநூல்

வடக்கின் ஆசிரியர் கலாசாலைகள் - சிறப்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய ஆய்வு என்ற நூல் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது.

01.10 2023 இடம் பெற்ற கல்லூரி நாள் நிகழ்வுகளில் பண்டிதர் செ.திருநாவுக்கரசு நூலின் முதல் பிரதியை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திரு இ.இளங்கோவனிடம் வழங்கி சிறப்பித்தார்.

இந்நூல் பற்றிய வெளியீட்டு உரையினை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போதைய கௌரவ ஆலோசகரும் கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளருமாகிய திரு.சரா புவனேஸ்வரன் அவர்கள் ஆற்றினார்.

நிகழ்வின் நன்றி உரையினை பிரதி அதிபர் த.கோபாலகிருஷ்ணன் ஆற்றினார். நிகழ்வுகளை கலாசாலையின் விரிவுரையாளர் வேல்.நந்தகுமார் தொகுத்தளித்தார்.









# கலாதீபம்

කලාදීප KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දිපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### நியாயமான இரண்டு கோரிக்கைகள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவின்போது மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு கடல்தொழில் அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் என கல்வித்துறை சார்ந்த உயர் பதவி நிலையினர் முன்னிலையில் ஆசிரிய மாணவர் சார்பில் உரையாற்றிய மாணவி இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தார். அது குறித்து கவனம் செலுத்துவது அவசியமானது. தமக்குரிய பரீட்சைகளை உரிய காலப்பகுதியில் நடாத்தி உதவுமாறும் காலம் பிந்தி பரீட்சை நடைபெறுகிற பொழுது பணிச்சுமை காரணமாக தாம் பரீட்சையை எதிர்கொள்வதில் இடர்களை எதிர்கொள்வதாகவும், முதலாவது கோரிக்கையை அந்த மாணவி விடுத்தார்.

இதனைவிட ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் மேற்படிப்பாக தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற கல்விமாணி கற்கைக்குச் செல்லும்பொழுது படித்தவற்றையே மீண்டும் படித்து நான்கு வருடங்களுக்கு இக்கற்கை நெறியை தாங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலையை தேசிய கல்வி நிறுவகம் ஏற்படுத்தியிருப்பதாகவும், ஆனால் தம்மை ஒத்த சம தகுதியுடைய தேசிய கல்வியியல் கல்லூரி பயிற்சிதாரர்கள் ஒன்றரை வருடகால விலக்கு பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டடிருந்தார்.

ஆசிரிய மாணவர்களின் இந்தக் கோரிக்கை கல்வித்துறை சார்ந்தவர்களால் இன்னும் கவனத்தில் எடுக்கப்படாத வீரியமான வேண்டு கோளாகவே இருக்கிறது. இதன் வீரியத்தன்மை குறித்த விழிப்புணர்வு ஆசிரிய கலாசாலைகளில் பயின்ற பெரும்பாலான ஆசிரிய மாணவர்களிடத்தில் இல்லை என்பதும் துரதிஸ்டவசமானது. ஆசிரிய பயிற்சி நிறைவுற்று ஆறு தொடக்கம் ஒன்பது மாதக் காத்திருப்பின் பின் பரீட்சை எழுதுவது என்பது நடைமுறையில் சிரமமான விடயமாகும். புதிதாக பயிற்சி பெற்ற உளத்துணிவோடு பாடசாலைகளில் உத்வேகமாக சேவையாற்றும் ஆசிரியருக்கு உளரீதியான சுமையை காலம் தாழ்த்திய பரீட்சை ஏற்படுத்திவிடும். இவர்களது இரண்டாவது கோரிக்கையையும் கல்வியியலாளர்கள் நியாய பூவமாக அணுகவேண்டியது அவசியமாகும். ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் உள்ள பாடத்திட்டத்திற்கு அமைவான பல விடயங்களையே கல்விமாணி கற்கைநெறியின் ஆரம்பநிலைப் கலைத்திட்டமும் கொண்டிருக்கிறது. இதற்கு சமதையான கலைத்திட்டத்தையே தேசிய கல்வியியல் கல்லூரியும் முன்னெடுக்கிறது. ஆசிரிய கலாசாலைகளில் பயின்றவர்களுக்கு ஒன்றரை வருட விலக்கு வழங்கப்படாமலும், தேசிய கல்வியில் கல்லூரிகளில் கற்பவர்களுக்கு ஒன்றரை வருட விலக்கு வழங்கப்படுவதும் இரண்டு கற்கைகளையும் சமநிலைக் கண்ணோட்டத்தில் பார்க்காத தன்மையை சுட்டி நிற்கிறது. ஆசிரிய கலாசாலையில் பயின்றவர் க.பொ.த உயர்தரம் பயின்றவருக்கு ஒப்பாக ஆரம்பத்திலிருந்து கல்விமாணி கற்கையினை மேற்கொள்ள வேண்டியிருப்பது இக்கற்கையை வடிவமைத்தவர்கள் கலாசாலைக் கலைத்திட்டம் குறித்த பின்புலத்தை அறியாதவர்களோ என்று எண்ண வைக்கிறது. எது எவ்வாறு எனினும் இக்கற்கைநெறி பற்றி எதிர்காலத்தில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கல்வி அமைச்சரின் கவனத்திற்கு எடுத்ச் செல்வதாகவும் கடல்தொழில் அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்கள் குறிப்பிட்டமை இத்தகையை பயிற்சியை மேற்கொள்வோருக்கு ஆறுதல் தரும் செய்தியாகும். கல்வி உலகோர் இவை குறித்து கவனம் செலுத்தவேண்டும்.

- அதிபர்-

## கலாதீபம் மின் இதழ் நூற்றாண்டு சிறப்பிதழாக வெளியீடு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையால் வெளியிடப்படும் - கலாதீபம் மின்னிதழின் 16ஆவது இதழ் - நூற்றாண்டு கல்லூரி நாள் சிறப்பு இதழாக 01.10.2023 கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

மின்னிதழின் பிரதம ஆசிரியர் விரிவுரையாளர் செல்வி தர்ஷினி முத்துராஜா கல்லூரி நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திரு இ.இளங்கோவனிடம் முதல் பிரதியை கையளித்தார். இதேவேளை திறன் பலகையிலும் (Smart Board) சபையோர் முன்னிலையில் கலாதீபம் மின்னிதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதனை கலாசாலை உபஅதிபர் திருமதி சத்தியா ரஞ்சித் வெளியிட்டு வைத்தார்.








# News in Brief - Month of October

**01.10.2023**
**Centenary College Day**

Kopay Teachers' College Centenary College Day Celebration was conducted on 01.10.2023 Sunday morning at the College.
At 6.30 am a special pooja and Pongal were held at the Yogalingeswarar temple and at 9a.m the cultural procession started with 101 holy pots (Niraikudam)
The event was presided by the Principal of the college Mr. S. Laleesan. Chief Guest was Mr. L.Ilancovan, Additional Secretary to the His Excellency the President and the Special Guests were the Former Principals of the college Mr.V.K Kanapathipillai and Mr. V. Karunalingam and the Principal of Neerveli Karanthan Ramupillai Vidyalaya Mrs.Shanthiny Vakeesan as the Guest of Honor.
On the centenary day of the college, Religious Leaders from all three faiths also offered blessings.

**01.10.2023**
**The publication of the Research book - Northern Teachers' Colleges**

A book titled Northern Teachers' Colleges – particularly Kopay Teachers College was written and published by the former vice Principal of the college, Pandit Dr. S. Thirunavukarasu. First copy of book was presented to the Chief Guest Mr. L.Ilancovan.

**01.10.2023**
**Launching of Kaladeepam E-Magazine**

Kaladeepam E-Magazine (Issue 16) - Published by Kopay Teachers' College - Centenary College Day Special Issue was published on 01.10.2023 at Rathilaxmi hall. Chief Editor of the E-Magazine Lecturer Ms Dharshini Muthurajah handed over the first copy to Mr L Ilankovan, Additional Secretary His Excellency the President who was the Chief Guest of the College Day function.
At the same time Kaladeepam E-Magazine was launched over the Smart Board in front of the congregation by the Vice Principal of the college Mrs. Sathiya Ranjith.

**04.10.2023**
**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, The event started at 8.30 am. 2$^{nd}$ year Physical Education B Course conducted the event. It was presided over by Mrs. Srisakthi Rammiyarakulan. 2nd year Physical Education course B Teacher trainee. Mr V. Visitharan gave a student speech on Teacher Education.
The Guest introductory speech was delivered by Mr T. Thavasekhar, Lecturer of the College. The Former Lecturer Mr. V.S.Gunaseelan was Addressed on the titled "Education 4.0".

**06.10.2023**
**Teachers' Day**

The Centenary Teachers' Day Ceremony of Kopay Teachers' College was held on 06.10.2023 at 9 am at Rathiluxsmi hall under the leadership of Students' Counsel President Mr. S.Thanaseelan. Former Vice-Chancellor of University of Jaffna and Professor of Emeritus Pon Balasundarampillai was participated as the Chief Guest.
The Centenary song was released by musician Mr Anton Jems Lurgino.

**09.10.2023**
**Educational Research symposium**

The Educational Research Symposium was held successfully on 09.10.2023 from 8.30a.m to 5p.m Under the guidance of Department of Education, University of Jaffna & with the permission of Teacher Education Administration Branch, Ministry of Education, Isurupaya.
It was Chaired by Dr(Mrs)J.Rasanayagam Head, Department of Education, University of Jaffna Keynote was delivered by Prof.T.Velnampy Senior Professor, University of Jaffna.
Two sessions were held. The Technical Session I - Sir Pon.Ramanathan Memorial Forum presided by Dr A. Nithilavarnan, Senior lecturer, Dept.of Education, Univerdity of Jaffna, and
The Technical Session II – ubathiyayar Karainagar S.Arunasalam Memorial Forum was headed by Dr S.Paramanantham President, Jaffna NCoE, Kopay.
The 50 student teachers from Jaffna NCoE, 101 Teacher students from Kopay GTC, 30 Academic staff from Kopay GTC, and Jaffna NCoE participated in the Symposium. The symposium was concluded at 5 p.m

**10.11.2023**
**Centenary Walk from Nallur towards Kopay Teachers' College**

Centenary Walk of Kopay Teachers' College was started at 6.45 am at Nallai Atheenam. The Srilasree Somasundara Thesiga Gnanasampantha Paramacharya Swami gave blessings for the walk. Former principals V.K.Kanapathipillai, V.Karunalingam, Irupalai Karpaga Pillaiyar Temple Priest Shivshree B.Selvasena Kurukkal. Former Lecturer V. S. Gunaseelan, and Jaffna National College of Education students and Lecturers participated and supported in the walk

# News in Brief - Month of October

**11.10.2023**

## Grand Finale of Centenary Celebration

Grand Finale of Centenary Celebration of Kopay Teachers' College was held on Wednesday morning from 8.30 am to 10.45 am under the leadership of the Principal Mr S. Laleesan.

The Chief Guest Hon. Dr. Susil Premajayantha Minister of Education, The Special Guest Hon. Douglas Devananda M.P.( Minister of Fishers) and Guest of Honor Mr M.N. Ranasinghe (Secretary, Ministry of Education, Isurupaya) were graced the occasion.

**11.10.2023**

## Kalaimalar Magazine published

Kalaimalar Magazeen was published at the Grand Finale of Centenary Celebration. Editor Lecturer Mr. K. Balashanmugan delivered the publication address. The first copy was issued by the principal to the Ministers.

**11.10.2023**

## Honored Former Principals

The former principals of the KTC and the long—serving veterans were honored in the Grand Finale of Centenary Celebration.

Shivsree B.Selvasena Kurukkal, who has been working as chief priest in the temple of the KTC Yogalingeswerar Temple for more than thirty years and Former Principals

Chevalier Ms. Sivalokanayaki Ramanathan (12.01.1993 - 11.08.1996)

Ms. Malar Shinnaiya (13.10.2008 - 18.05.2010)

Mr.K.Bernard (19.05.2010 - 03.11.2010)

Mr.V.K.Kanapathipillai (04.11.2010 - 16.08.2014)

Mr V. Karunailangam (17.08.2014 - 31.12.2022) and Mr N. Subramaniam (Staff Assistant) had been honored.

**11.10.2023**

## A stamp of Rs 25 and a first day Postal cover were launched by the Post Master General

This event organized under the leadership of Principal S. Laleesan. It was sponsored by the 1998/1999 teacher trainees of KTC. Lecturer Mr. V.Senthan, who facilitate to launch the stamp, moderated the event.

Additional Government Agent Mullaitivu District Mr S.Gunapalan and The Principal of Otisuttan Maha Vidiyalaya Mr.S Nagendrarajah participated in the launching event. Deputy Chief Post Master General (Operations) Mr D.A. Rajitha K Ranasinga, Head of Philatelic Bureau Ranjith, headed over the First day cover and stamp to the Hon.Minister of Education and the Hon Minister of Fisheries.

**19.10.2023**

## Muththamil Vilaz

Muththamil Vilaz was held on Wednesday morning from 9 am to 4.30 pm at Kopay Teachers' College under the leadership of Principal S. Laleesan.

Additional Government Agent Mullaitivu District Mr Sivapalan Gunapalan was graced the occasion as the chief guest .Assistant Director of Education Aesthetics Thunukkai Education Zone Mr. Nagaratnam Rajan was participated as the special guest. And also Mr. P. Prashanthan Mrs. Bharath Veenavagini (Teacher Kudattanai A.M.T.M.. School) Mr. V. Gajendran (Velupillai Foundation) were the guest of honors .

**24.10.2023**

## Vani Vilaz

On Tuesday, at 10.30 am, the Vani vilaz of the college was held under the leadership of Mr. S. Laleesan, the principal of the college. Medical Officer of Health, Thellipalai and General Secretary of Savai Mahasabha Dr.Para.Nandakumar. Was grace as chief guest. Special guest was Kalvi karuṇiyan E.S.P. Nagaratnam (President Karainagar Maikkavasakar Annadanasabha Owner of Kajamukha Hardware) also participated.

**27.10.2023**

## Annual Feast

Annual feast of the Sr.Mary's Chapel at Kopay Teachers' College was celebrated by the Christion Union on Friday at 9 am to 11 am in the Rathiluxmi hall. The chief celebrant Rev.FR.J.J.Moulish (Parish Priest, Cathedral Dean, Jaffna Deanery) and also Rev FR.M.L.Monbert (Parish Priest Kopay) participated in the mass and also blessed the event.

**25.10.2023**

## Wednesday Assembly

The event started at Rathiluxmi hall at 8.30 am under the leadership of Mr. S. Laleesan, Principal, Kopay Teachers' College. 2nd year English Course teacher trainees conducted the event was Presided over by Mrs. Mohamed Razmy Rushaniya. 2nd year English course teacher trainee Raveendrarasa Pratheepan delivered a speech on Importance of Reading.

Mrs. Sathiya Ranjith, Vice Principal of the College, delivered the introductory speech of Keynote speaker. Keynote Speaker was Former lecturer Palali and Kopay Teachers' Colleges, Mr Ramanathan Maruthalingam.

Mr Selastheen Kanistsn, a 2nd year teacher trainee of Christianity course, who provided the best sound system in the functions appreciated by the Muththamil Manram .

# கொடிகள் ஆலவட்டங்கள் நிறைகுடங்களுடன் களை கட்டிய நூற்றாண்டு நாள் பவனி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நிறுவுனர் நாளை நினைவு கூறும் வகையிலான நிகழ்வுகள் 01.10,2023 காலை கலாசாலையில் சிறப்பாக நடைபெற்றது.

6.30 மணிக்கு பொங்கல் வழிபாடு இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்று பண்பாட்டு பவனி ஆரம்பமானது..

பண்பாட்டு பவனியின் போது சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களை சார்ந்த கொடிகள் எடுத்து வரப்பட்டதுடன் நூற்றாண்டை குறிக்கும் வகையில் 101 நிறைகுடங்களுடனான ஊர்வலம் மங்கள வாத்தியத்துடன் எடுத்துவரப்பட்டது.

கலாசாலையின் அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திரு இ.இளங்கோவன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலாசாலையின் முன்னாள் அதிபர்களான திரு வே.கா கணபதிப்பிள்ளை, திரு வீ.கருணைலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.












# கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு கேக் வெட்டிக் குதூகலம்

கலாசாலையின் நூற்றாண்டை குறிக்கும் வகையில் முன்னாள் அதிபர்கள் பிரதி அதிபர்கள் இணைந்து கேக் வெட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். 01.10.2023 கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நூற்றாண்டு கல்லூரி தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முன்னாள் அதிபர் வே.கா கணபதிப்பிள்ளை முன்னாள் அதிபர் திரு வீ கருணைலிங்கம் முன்னாள் பிரதி அதிபர் செல்வி வி.வேலுப்பிள்ளை உள்ளிட்டோர் இதற்கென விரிவுரையாளர் திருமதி பா.சர்மிளாவால் வடிவமைக்கப்பட்ட நூற்றாண்டுக் கேக்கை (Cake) வெட்டி மகிழ்ச்சியை பரிமாறினர்.

இதன்போது பிறந்தநாள் வாழ்த்துப் பாடல் ஆசிரிய மாணவர்களாலும், முன்னாள் ஆசிரிய மாணவர்களாலும் இசைக்கப்பட்டது.
நூற்றாண்டு கல்லூரி நாளில் மூன்று சமயங்களை சார்ந்த மதத் தலைவர்களும் ஆசி வழங்கினர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு கல்லூரி தினவிழா 01.10.2023 ஞாயிறு காலை கலாசாலையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது இருபாலை கற்பகவிநாயகர் தேவஸ்தானத்தினதும் கலாசாலையில் கோயில் கொண்டருளும் யோகலிங்கேஸ்வரர் சுவாமி கோவிலினதும் பிரதமகுரு சிவஸ்ரீ பா.செல்வசேன குருக்களும் யாழ்ப்பாண மறைமாவட்ட மறைக்கல்வி நடுவு நிலைய இயக்குனரும் கலாசாலையின் மரியன்னை ஆலய மறைக்குருவுமாகிய அருட்பணி X.W ஜேம்ஸ் அடிகளாரும் மௌலவி M.K.C ஜாகீர் அவர்களும் ஆசி உரைகளை வழங்கினர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இன்னும் இன்னும் பல நூறாண்டுகள் செழித்து வளர வேண்டும் என வேண்டி தமது ஆசி உரைகளை வழங்கினர்.










# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டையொட்டி கல்விசார் ஆய்வு மாநாடு சிறப்புற இடம்பெற்றது

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கல்விசார் ஆய்வு மாநாடு 09.10.2023 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.30 வரை இடம்பெற்றது.

கோப்பாயில் கலாசாலை நிறுவப்படுவதற்கு பின்புலமாக இருந்த சேர்.பொன்.இராமநாதன் பெயரிலும் காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரிலும் இரு அரங்குகள் அமைக்கப்பட்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாநாட்டின் தொடக்க நிகழ்வு பொது அரங்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் கலாநிதி (திருமதி) ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆய்வு மாநாட்டு சிறப்புரையை ஆற்றினார். வெற்றி பெறுவதில் மனப்பாங்கின் வகிபாகம் என்ற பொருளில் அவரது உரை அமைந்தது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரையையும் விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அரங்க அழைப்பாளர் உரையையும் வழங்கினார்.

ஆய்வுக்கட்டுரை அளிக்கைகளின் முதல் அமர்வு கலாசாலைக்கென காணியை வழங்கிய சேர் பொன் இராமநாதன் அரங்காக – யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன் தலைமையில் நடைபெற்றது. கோப்பாயில் ஆசிரிய கலாசாலையை நிறுவதற்கு அடித்தளமிட்ட காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரில் இரண்டாவது அரங்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் அருணாசலம் உபாத்தியாயர் குடும்பத் தினரும் பங்கேற்றனர். பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக, தேசிய கல்விநிறுவக, கலாசாலைகள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய 150 பக்கங்கள் கொண்ட ஆய்வு மாநாட்டு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.















# நல்லூரிலிருந்து கலாசாலையை நோக்கி நடைபவனி நல்லை ஆதீன முதல்வர் தொடக்கி வைத்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை சிறப்பிக்கும் நடைபவனி 10.10.2023 காலை 6.45 மணிக்கு நல்லூர் ஆலயத்தின் பின்புறத்தில் உள்ள நல்லை ஆதீன வாயிலில் ஆரம்பமாகியது.

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசி வழங்கி நடைபவனியைத் தொடக்கி வைத்தார். முன்னாள் அதிபர்களான வே.கா கணபதிப்பிள்ளை வீ கருணலிங்கம் இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் வ.சி.குணசீலன் எனப் பலர் நடை பவனியில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவ ஆசிரியர்களும் நடைபவனிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்து கொண்டனர்.

கலாசாலை அதிபர் திரு ச லலீசன் தலைமையில் இடம் பெற்ற இந்த நடைபவனியின் போது ஆசிரியர்கள் ஞான விளக்குகள் என்பதனை சித்திரிக்கும் வகையில் மிகப்பெரிய விளக்கு ஒன்று வடிவமைக்கப்பட்டு எடுத்து செல்லப்பட்டது.

இந்த வைபவத்திற்கான ஊர்தியை கலாசாலையின் (2002/2003) அணியினர் (சித்திர பாட உதவிக்கல்வி பணிப்பாளர் நா.ராஜன் மற்றும் விரிவுரையாளர் து.இளங்கோ குழுவினர்) வடிவமைத்திருந்தனர். கலாசாலை உத்தியோகத்தர் திரு செந்தில்குமார் வாகன வசதியை வழங்கினார்












# புதன் 20.09.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக ஓய்வுநிலை விரிவுரையாளர் திரு வ.சி குணசீலன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

**ஆசிரியர்களாகிய நாம் ஒரு பெரிய சவாலை எதிர்கொள்ளப் போகிறோம். அது புதிய தலைமுறை சவால்**

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.

இரண்டாம் வருட உடற்கல்விநெறி B ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர்.

திருமதி ஸ்ரீசக்தி ரம்மியராகுலன் தலைமையேற்று நடத்தினார். இரண்டாம் வருட உடற்கல்விநெறி B ஆசிரிய மாணவன் வி.விசிதரன் ஆசிரியத்துவம் பற்றிய மாணவர் உரையினை ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் விரிவுரையாளர் த.தவசேகர் அவர்கள் ஆற்றினார்.

அதிதி பேச்சாளராக ஓய்வுநிலை பலாலி, கோப்பாய் உயிரியல் பாட விரிவுரையாளர் திரு வ.சி.குணசீலன் அவர்கள் கலந்து கொண்டார்.

கல்வியில் 4.0 என்ற பொருளில் உரையாற்றினார்

21ம் நூற்றாண்டில் அறிவியலின் விஸ்வரூப வளர்ச்சியானது அனைத்துத் துறைகளிலும் வியாபித்து வருவதை காணலாம். அந்தவகையில் இத் தொழிநுட்ப வளர்ச்சியானது கல்வித்துறையிலும் முக்கிய பங்கினை வழங்கியுள்ளது.

தொழில்நுட்ப பயன்பாடு இல்லாத கல்வி 2.0 என அழைக்கப்பட்டது கல்வி 4.0 என்பது வளர்ந்து வரும் நான்காவது தொழில்நுட்ப புரட்சியுடன் தன்னை இணைத்துக் கொள்ளும் கற்றலுக்கான ஒரு அணுகுமுறையாகும் இந்த தொழில்துறை புரட்சி சிமாட் தொழில்நுட்பம் (Smart Technologies) செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் ரோபோட்டிக்ஸ் (Robotics) ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது இவை அனைத்தும் இப்போது நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்பாட்டுக்குரியவையாக மாற்றம் பெறுகின்றது.

21 ஆம் நூற்றாண்டு வகுப்பறை ஒரு புரளும் வகுப்பறையாக (Flipped Classroom) இருக்க வேண்டும். இது தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு பின்பற்றப்படுகின்ற ஒரு முறையாகும் இக்கல்வி முறையானது மாணவர்கள் விண்வெளியில் சுதந்திரமாக நடப்பது போல் அறை முழுவதும் சிதறி இருக்கும் வட்ட மேசைகளில் அமர்ந்து செயல்படவும் தேவைப்பட்டால் ஆசிரியர் மாணவர்களை அணுகவும் கூடியதாகவும் காணப்படும்.இவ்வாறு தனது உரையினை அறிவியல் ரீதியாக நகர்த்திச் சென்றார் அதிதி அவர்கள்.

நிறைவுரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார். கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் அதிதி அவர்களுக்களை கொளரவிக்கும் நிகழ்வாக பொன்னாடை அணிவித்தும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.









# புதன் 27.09.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக ஓய்வுநிலை விரிவுரையாளர் திரு இ.மருதலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

## அன்றைய ஆசிரியர்களும் இன்றைய ஆசிரியர்களும்

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.

இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர். திருமதி முகமட் றஸ்மி ருசானியா தலைமையேற்று நடத்தினார். இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவன் இ.பிரதீபன் Importance of Reading பற்றிய மாணவர் உரையினை ஆங்கில மொழியில் ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் உப அதிபர் திருமதி சத்தியா ரஞ்சித் அவர்கள் ஆற்றினார்.

அதிதி பேச்சாளராக ஓய்வுநிலை பலாலி, கோப்பாய் தமிழ் மற்றும் கல்வி உளவியல் பாட விரிவுரையாளர் திரு இராமநாதன் மருதலிங்கம் அவர்கள் கலந்து கொண்டார். இன்றைய காலத்தில் ஆசிரியத்துவம் என்ற பொருளில் உரையாற்றினார்.

18 ஆண்டுகள் ஆசிரியப்பணியிலும் 16 ஆண்டுகளாக ஆசிரியர் கலாசாலைகளில் விரிவுரையாளராகவும் தனது பணியை ஆற்றியுள்ளார் அதிதி அவர்கள்.

மேலும் அவர் தனது உரையில்

கலாசாலைகளில் எவ்வளவுக்கு எவ்வளவு அனுபவங்கள் வழங்கப்படுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு கற்றல் நிகழ்கின்றது என்பதுதான் உண்மை. வகுப்பறையிலோ அல்லது குறிக்கப்பட்ட சில இடத்திலோ கற்றல் நிகழ்வதில்லை என்பது கண்கூடு ஒரு பிள்ளைக்கு எந்த அளவிற்கு அனுபவங்களை விரிவாக்கம் செய்கின்றோமோ அந்த அளவிற்கு பிள்ளைக்கு கற்றல் விரிவடையும் வலுவடையும். வகுப்பறையை விட வெளியே கூடுதலான அனுபவங்களை பெற முடியுமானால் அவ்வாறு பெற்றுக்கொண்ட விடயங்களை கற்றல் இடமாற்றம் செய்ய வேண்டும். தனியே கற்றுக் கொண்டு அனுபவங்களை பார்த்துக்கொண்டும் பெற்றுக் கொண்டும் இருத்தல் மட்டும் போதாது இந்த அனுபவங்கள் உரியவாறு கற்றல் இடமாற்றம் பெற வேண்டும் ஆசிரியரிடம் தங்கி மாணவர்கள் கேட்கின்ற நிலைமை இன்று இல்லை சகிப்புத்தன்மை பொறுப்புக் கூறல் என்பன குடும்பத்தில் கூட கற்றல் இடமாற்றம் பெற வேண்டும் எனத் தனது உரையினைத் தொடர்ந்தார்.

கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை அணிவித்தும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.நிறைவுரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார். இந்நிகழ்வுகள் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தது.

அண்மைக் காலங்களில் நடைபெற்ற விழாக்களில் சிறந்த முறையில் ஒலி அமைப்பு வழங்கிய இரண்டாம் வருட கிறிஸ்தவநெறி ஆசிரிய மாணவன் செலஸ்தீன் கனிஸ்ரன் அவர்களுக்கு அதிதி பேச்சாளராகக் கலந்துகொண்ட திரு இ.மருதலிங்கம் அவர்கள் முத்தமிழ் மன்றம் சார்பில் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவித்தார்.












# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற ஆசிரியர் தினம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஆசிரியர் தின விழா 06.10.2023 காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் ஆசிரிய மாணவர் தலைவர் திருசு.தனசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கலந்து கொண்டார்.

கலாசாலை நூற்றாண்டை கௌரவிக்கும் வரிசையில் “கலாசாலை தாயே” என்ற இசை பேழையும் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவனும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும் இசை அமைப்பாளரும் ஆகிய ஜேம்ஸ் அன்ரன் லூர்ஜினோ அவர்களால் கலாசாலை தாயே என்ற இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன் காணொளி வடிவத்தை பிரதம விருந்தினர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை திறன் பலகையின் ஊடாக வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து இசை அமைப்பாளர் அவர்களுக்கான கௌரவம் மற்றும் பிரதம விருந்தினருக்கான கௌரவம் என்பன இடம் பெற்றன.

இந்நிகழ்வில் ஆசிரிய மாணவர்கள் தமது விரிவுரையாளர்களை கலாசாலை ஆலயத்திலிருந்து மாலை சூட்டி ஊர்வலமாக அழைத்து வந்ததுடன் நினைவுச் சின்னத்தையும் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.















# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ்விழா சிறப்பாக இடம்பெற்றது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் விழா 19.10.2023 கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் சங்கீத பூஷணம் பூத்தகொடி புகழ் செ.குமாரசாமி அரங்கில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவபாலன் குணபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். துணுக்காய் வலய அழகியல் கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் நாகரட்ணம் ராஜன் சிறப்பு விருந்தினராகவும் ழகரம் அறக்கட்டளை பொ. பிரசாந்தன் குடத்தனை அ.த.க.பாடசாலை ஆசிரியை பாரத் வீணாவாஹினி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடக்கவுரையை முத்தமிழ் மன்ற காப்பாளர் விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமாரும் அரங்கத் திறப்புரையை சங்கீத பூஷணம் க.சி.சிவஞானராஜாவும் நிகழ்த்தினர்.

முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் நடனம், வில்லிசை, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கலாசாலை நூற்றாண்டு விழாவையொட்டி கலாசாலையின் 1998/1999 கல்வியாண்டு அணியினரின் ஆதரவில் வெளியிடப்பட்ட 25 ரூபாய் பெறுமதியான முத்திரை மற்றும் முதல்நாள் அஞ்சல் உறை தொடர்பாக வடமாகாண அஞ்சல் அத்தியட்சகர் மதுமதி வசந்தகுமார் ஓவியரும் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய நா.ராஜன் கோப்பாய் அஞ்சலக அதிபர், கலாசாலை அதிபர் ச.லலீசன் முத்திரை வெளியீட்டு இணைப்பு விரிவுரையாளர் வே. சேந்தன் ஆகியோர் 98/99 ஆசிரிய மாணவர் அணியினரால் கௌரவிக்கப்பட்டனர்.














# கலாசாலையின் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மானம்பு உற்சவம் மற்றும் இந்து மன்றம் நடாத்திய வாணிவிழா

கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரி விரதத்தின் நிறைவு நாளான இன்று செவ்வாய்க்கிழமை காலை விஜயதசமி உற்சவம் மற்றும் அட்சர ஆரம்பம் (ஏடு தொடக்கல்) என்பன இடம்பெற்றன.

சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம் பெற்றன. 24.10.2023 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மானம்பு உற்சவம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கு அட்சர ஆரம்ப நிகழ்வு ஆரம்பமானது அதிபர் ச.லலீசன் சிறார்களுக்கான அட்சர ஆரம்பத்தினை செய்து வைத்தார். கலாசாலை ஆசிரிய மாணவர்களின் பிள்ளைகள். . உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் மற்றும் கலாசாலை வெளி சமூகத்தினரின் பிள்ளைகள் என பலர் அட்சர ஆரம்ப நிகழ்வில் பங்கு கொண்டனர்.

24.10 .2023 செவ்வாய்க்கிழமை காலை 10:30 மணிக்கு கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் தலைமையில் கலாசாலையின் வாணி விழா இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியும் இந்துமகாசபையின் பொதுச் செயலாளருமாகிய மருத்துவர் பரா. நந்தகுமாரும் சிறப்பு விருந்தினராக தொழில் அதிபர் கல்விக் காருண்யன் திரு ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களும் கலந்து கொண்டனர்.

யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து சரஸ்வதி திருவுருவம் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்களின் பஜனைப் பாடல்களுடன் ஊர்வலமாக ரதிலட்சுமி மண்டபத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

இதன் போது விழாவிற்கு உரிய சம்பிரதாயங்களில் ஒன்றான தேசியக்கொடி மற்றும் கலாசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டன.

மேடை நிகழ்வுகளில் வரவேற்புரையினை ஆசிரிய மாணவன் ச.கஜராஜ் (இரண்டாம் வருடம் கணிதநெறி) ஆற்றினார்

ஆசியுரையினை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் வழங்கினார். வாழ்த்துறையை கலாசாலையின் பிரதிஅதிபர் க.செந்தில்குமரன் அவர்கள் ஆற்றினார்

தொடக்க உரையினை ஆசிரிய மாணவன் கா.பிரசாந்த் (உடற் கல்வி நெறி ஏ, இந்து மன்ற தலைவர்) ஆற்றினார் காப்பாளர் உரையினை இந்து மன்ற காப்பாளர் விரிவுரையாளர் கு.பாலசண்முகன் ஆற்றினார்.இந்நிகழ்வில் விரிவுரையாளர் தர்ஷினி முத்துராஜாவின் நெறியாள்கையில் தீப நடனம் மற்றும் முதலாம் இடம் பெற்ற பேச்சு, பண்ணிசை பாடல்கள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் இடம்பெற்ற பட்டிமன்றத்தின் நடுவராக விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அவர்கள் திகழ்ந்தார்.

நன்றியுரையை திருமதி ச பிருந்தா செயலாளர் (இந்து மன்றம்)அவர்கள் ஆற்றினார்.இந்து மன்றத்தினால் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் பிரதம, சிறப்பு விருந்தினர்களால் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.









# கலாசாலையின் புனித மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் திருப்பலி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் திருப்பலி 27.10.2023 வெள்ளி காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கலாசாலையின் கிறிஸ்தவ மன்ற ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் மறைக்கோட்ட முதல்வரும் யாழ் பேராலய பங்குத் தந்தை யுமாகிய அருட்பணி ஜே.ஜே மௌலீஷ் அடிகளாரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கோப்பாய் பங்குத்தந்தை எம்.எல் மொன்பேட் அடிகள் பெருநாள் திருப்பலியில் கலந்து ஆசி வழங்கினார்.

இந்நிகழ்வில் முதலில் சிற்றாலயத்திலிருந்து பிரதான மண்டபத்தை நோக்கி கோப்பாய் பங்கு தந்தையால் புனித மரியன்னை திருச்சொரூபம் எழுந்தருள செய்யப்பட்டது.

இதன் போது கலாசாலை அதிபர், பிரதி அதிபர்கள் விரிவுரையாளர்கள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், மாணவ ஆசிரியர்கள் எனப் பலர் ஊர்வலமாக அன்னையின் திருச்சொரூபத்தை மண்டபத்தை நோக்கி எடுத்துச் சென்றனர்.

தொடர்ந்து மண்டபத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதன்போது கிறிஸ்தவ மன்ற ஆசிரிய மாணவ இசைக் குழுவினர் தெய்வீக கானங்களை இசைத்தனர்.

நிகழ்வின் நிறைவில் அதிபர் நிறைவுறை ஆற்றினார் கிறிஸ்தவ பாட விரிவுரையாளர் திரு ஜே..பாலகுமார் நன்றியுரையையும் அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ மன்ற ஆசிரிய மாணவியின் திருமதி அ.யாழினியின் நன்றி உரையும் இடம் பெற்றன.















**முதலாம் பக்க தொடர்ச்சி**

சிறப்பு பிரதிகளை யாழ்ப்பாணம் தேசிய கல்விய கல்லூரி விரிவுரையாளர் துரை இளங்குமரன் கலாசாலையின் விரிவுரையாளர்களான பொ. சற்குணநாதன், த.தவசேகர் நிர்வாக உத்தியோகத்த திருமதி வதனி கேதாரநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கலாசாலையின் முன்னைநாள் அதிபர்கள் மற்றும் நீண்ட காலம் சேவை ஆற்றிய பெருந்தகைகளுக்கான கௌரவம் இடம்பெற்றது முப்பது வருட காலத்திற்கு மேலாக கலாசாலையின் ஆலயத்தில் பூசகராக பணி ஆற்றிக் கொண்டிருப்பவரும் கற்பகப் பிள்ளையார் ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பா. செல்வசேன குருக்களுக்கான கௌரவம் முதலில் இடம்பெற்றது அதனைத் தொடர்ந்து முன்னாள் அதிபர்களான செவாலியர் திருமதி சிவலோக நாயகி இராமநாதன் செல்வி மலர் சின்னையா .திரு.கை.பேணாட், வே.கா. கணபதிப்பிள்ளை, வீ.கருணைலிங்கம் மற்றும் 40 வருடங்கள் சிற்றூழியராக கடமை புரிந்த ந. சுப்பிரமணியம் ஆகியோருக்கான கௌரவம் இடம்பெற்றது. இந்நிகழ்வினை கலாசாலையின் மூத்த விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன் நெறிப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சரின் செயலாளர் எம் என் ரணசிங்க உரையாற்றினார் அவரது உரையை அடுத்து கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றினார் அவரைத் தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வி அமைச்சர் டாக்டர் சுசில்பிரேம ஜெயந்த உரை ஆற்றினார்.

கலாசாலைக்கான 25 ரூபா பெறுமதியான முத்திரை மற்றும் முதல் நாள் அஞ்சல் உறை என்பன வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதனை கலாசாலையின் 1998/ 1999 ஆசிரிய மாணவர் அணியினர் இணைந்து வெளியிட்டு வைத்தனர் இதனை வெளியீடு செய்வதில் முன் நின்று உழைத்த விரிவுரையாளர் திரு.வே.சேந்தன் முத்திரை வெளியீட்டு நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் ச.குணபாலன். ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயா அதிபர் சி.நாகேந்திரராஜா ஆகியோர் முத்திரை வெளியீட்டில் பங்கு கொண்டனர். முத்திரை வெளியீட்டினை பிரதம அஞ்சல் மா அதிபர் வெளியிட்டு வைத்தார். அமைச்சர்கள் இருவரும் முதல் முத்திரையையும் அதற்கான அஞ்சல் உறையினையும் பெற்றுக் கொண்டனர்.

மாணவர் சார்பில் கலாசாலையை வாழ்த்தி திருமதி திவ்யா ரவிவர்மன் உரையாற்றினார் நிறைவாக பிரதி அதிபர் த கோபாலகிருஷ்ணன் நன்றி உரை ஆற்றினார் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுற்றன.

நிகழ்வில் கலாசாலையுடன் தொடர்புடைய முன்னாள் விரிவுரையாளர்கள், அலுவலர்கள், பழைய மாணவர்கள், தற்போதைய மாணவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் மண்டபம் நிறைந்த அளவில் கலந்து கொண்டனர்











## நூற்றாண்டு வாழ்த்துப் பாடல்

**பாடல் வரிகள் : ச.லலீசன்**

**பாடியவர் : டெவ்றீனா அன்ரன்**

**இசை : ஜேமஜ் அன்ரன் லூர்ஜினோ**

**பல்லவி**

நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

என்றென்றும் வாழ்க இனிதாக - புகழோங்கி நிதம்

என்றென்றும் வாழ்க இனிதாக (நூற்றாண்டு..)

**அனுபல்லவி**

இராமநாத வள்ளலாரின் ஐந்துஏக்கர் நிலப்பரப்பில்

கல்விப் பயிர் வளர்ந்து நிற்குதம்மா ஆசிரியம் என்ற

கல்விப் பயிர் செழித்து ஓங்குதம்மா (நூற்றாண்டு)

**சரணங்கள்**

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து மூன்றினில்

அவனியில் அவதரித்தாளே

ஆசிரியர்க்(கு) அன்னை என்று வழி

காட்டி நின்றனளே

நூற்றாண்டு வாழ்வினில் முப்பதாயிரம் மாந்தரை

ஆசிரியர் ஆக்கி நின்றனனே எம்கோப்பாய் அன்னை

எம்மண்ணின் கல்வி - உயர்த்தி நின்றனளே (நூற்றாண்டு)

என்றென்றும் நலமோங்கி உயர்வாக வாழ்க தாயே

வாழ்த்துக்கள் தந்து மகிழ்கின்றோம்

நலமோங்கி நாங்கள் வாழ

ஆசிபல கேட்டு நின்கின்றோம்

தமிழ்மொழிசார் ஆசிரியம் தனித்துயர்வு பெற்றிடவே

ஒருவழிதான் காட்டிநில்லம்மா

கல்வியால் உலகை வென்றிடுவோம்

(நூற்றாண்டு)

(ஒருவழி – ஒப்பற்ற வழி)

## நூற்றாண்டு வாழ்த்துக் கவிதை

நூற்றாண்டு காணும் எம் கல்வித் தாயே
கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு
இன்று நூற்றாண்டு
இநத யுகப் பயணம் கண்டு
மெய் சிலிர்க்கின்றோம்
மூப்பாய் கொண்டாடும் விழாதனில்
தோப்பாய் நாமும் இணைந்திருப்பது மகிழ்ச்சி

நூற்றாண்டுக்கு முன்
அருணாசல உபாத்தியாயர்
எடுத்த அரு முயற்சியது
சேர்பொன் ராமநாதன்
நிலம் கொடுத்துச் சேர்த்த பெருமையிது
ஆற்றல் மிகு நல் அதிபர்கள்
அர்ப்பணிப்பு சேவையதால்
போற்றல்மிகு கல்வியியலாளர் பணிகளால்
கற்றெனவே கல்வி சாரா ஊழியர் தம் பணிச்சிறப்பால்
நாற்றெனவே நல் ஆசிரியம் விதைத்தாயே

நூற்றாண்டு காணும் வேளைதனில்
போற்றி உனை வணங்குகிறோம் நாமே.
நூற்றாண்டில் உன்னில் பணி செய்ய கிடைத்த
பேற்றினை எண்ணி பெருமை கொண்டோம். இன்னும்

பல்லாண்டு நீ வாழ்ந்து – எம் மண்ணில்
சொல்லாண்ட நற்றமிழ் ஆசிரியம் மிளரவைக்க
எல்லாம் வல்ல இறைபதம் பணிந்து
இதயத்தால் வாழ்த்துகின்றேன் வாழி வாழி

**ஆக்கம்**
**வேல்நந்தகுமார்**
**விரிவுரையாளர்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

# கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் காரைநகரின் பங்கு



ஆக்கம்
காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

இன்று கோப்பாய் ஆசிரியர் கல்லூரி தனது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்றது . காரைநகரிற்கும் இந்த ஆசிரியர் கல்லூரியிற்கும் நீண்ட நெடிய தொடர்பு இருக்கின்றது . அதனைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்தவர் காரைநகரைச் சேர்ந்த சைவத் தமிழ் அறிஞர் அருணாசலம் உபாத்தியாயர் அவர்கள் அங்கே இருக்கின்ற யோகாம்பிகை சமேத யோகலிங்கேஸ்வரப் பெருமான் ஆலயத்தின் இன்றைய வளர்ச்சிக்கு ஆசீர்வாதம் வழங்கியவர் காரைநகரைச் சேர்ந்த பேப்பர் சுவாமிகள் எனப்படும் கல்வி கேள்விகளில் சிறந்த வீரவாகு வேலுப்பிள்ளை முருகேசு என்ற ஒரு சித்தர் . இவரே காரைநகரில் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை, களபூமி சுந்தரமூர்த்திநாயனார் ஆகிய பாடசாலைகளை ஆரம்பித்து வைப்பதில் முக்கிய கருவியாகச் செயற்பட்டவர்.காரைநகரைச் சேர்ந்த செல்வி.சத்தியமலர் சின்னப்பு (13.01.1985 - 11.01.1989), கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை (12.08.1996 - 20.05.1998), திரு.முருகேசம்பிள்ளை பரஞ்சோதி (21.05.1998 - 02.01.2003) ஆகியோர் அதிபர்களாக இருந்து அலங்கரித்து இருந்திருக்கிறார்கள் . காரைநகரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் இங்கே கற்று இருக்கிறார்கள் .

கல்வி அமைச்சில் நான் செயற்றிட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் அக்கல்லூரியிற்கான பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுப்பதில் கவனமாக இருந்திருக்கின்றேன் . அந்த வகையில் இக்கல்லூரியின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றிய ஊராகிய காரைநகரைச் சேர்ந்தவன் என்ற இறுமாப்புடன் கல்லூரி அன்னை இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்று அனைத்துக் காரைநகர் மக்கள் சார்பிலும் மனதார வாழ்த்துகின்றேன். அத்தோடு இந்தக் கலாசாலையினைத் தொடக்கி வைப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்த அருணாசல உபாத்தியாயர் பற்றிய சிறு குறிப்பு ஒன்றினை இங்கு தருகின்றேன்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை யாழ்ப்பாணத்தின் மூன்று சைவசமயக் கண்கள் என அடையாளப்படுத்தும் போது ஆறுமுகநாவலரையும் (1822 – 1879), இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தையும் (1884 – 1970), காரைநகர் ஆசிரியர் ச.அருணாசலத்தையுமே (1864 – 1920) அடையாளப்படுத்துகின்றார். தம் சொத்துக்களை விற்று கல்விப் பணியாற்றியதுடன் மாணவர்களுக்கு உண்டி உறையுள் கொடுத்து தமிழ் மொழிப்பற்றும் சைவப்பற்றும் உடைய சமூகம் ஒன்றை கட்டிஎழுப்பிய அருணாசல உபாத்தியாயர் அவர்களை “நாவலருக்கு பின் அருணாசலம் தான் இந்நாட்டில் ஒரே ஒரு மனிதர்” என்று குறிப்பிட்டுள்ளார் ஆறுமுக நாவலாரின் அண்ணனின் மகன் தம்பு கைலாய பிள்ளை அவர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மிசனரிமாரின் அரச தொழில் வாய்ப்பு என்னும் மாய வலைக்குள் சிக்கிய சைவத்தமிழ் மக்களைக் காத்து சைவத்தமிழ் மரபு சிதைவுறா வண்ணம் வந்தமையைத் தடுத்து நிறுத்தி வந்தவர் நல்லூரின் நாவலர் பெருமான்.நாவலரின் செயற்பாடுகளால் பெரிதும் கவரப் பெற்று அவர்வழியில் சைவத் தமிழ் காக்கப் புறப்பட்டவர்தான் அருணாசல உபாத்தியாயர் . சைவப் பெற்றோரின் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளில் கற்க வேண்டும் என்ற எண்ண மேலீட்டினால் காரைநகரில் பல சைவப் பாடசாலைகளை உருவாக்கினார்.

சைவப்பாடசாலைகளை உருவாக்குவதற்காக காரைநகரில் வாழ்ந்த சைவப் பெருமக்களை அணுகி அவர்களின் ஆதரவுடன் சுப்பிரமணிய வித்தியாசாலை, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வித்தியாசாலை(காரைநகர் இந்துக்கல்லூரி), வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை ஆகியனவற்றைத் தோற்று வித்தார். இதே போன்று யாழ்க்குடாநாடு முழுவதும் பல பாடசாலைகளைப் பரவலாக ஆரம்பித்ததுடன் கோப்பாயில் சைவ ஆசிரிய கலாசாலை ஒன்றையும் நிறுவி சைவ

ஆசிரியர்களை தோற்றுவிக்கும் பணிக்கு முன்னோடியாக திகழ்ந்தார். 1916 இல் கோப்பாயில் ஆசிரியர்கள் கற்பதற்காக இவர் உருவாக்கிய போதனா பாடசாலையை (கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலை) நிதி நெருக்கடியால் அவரால் தொடரமுடியாமல் போனது.

எனினும் அருணாசல உபாத்தியாயர் அவர்களின் முயற்சியே இன்றைய கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1923 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி கோப்பாய் தெற்கு பிரதேசத்தில் சேர்.பொன்.இராமநாதன் வழங்கிய 05 ஏக்கர் நிலத்தில் உருவாவதற்கான ஊக்கியாக அமைந்தது என்று குறிப்பிடலாம் . அருணாசலம் உபாத்தியாயர் உருவாக்கிய கோப்பாய் போதனா பாடசாலை இன்றைய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இருந்த இடத்தின் அருகில் இருந்தது என்று கூறுகின்றார்கள் அருணாசலம் உபாத்தியாயரின் தூண்டுதலின் பேரிலேயே இந்து போட் இராசரத்தினம் அவர்கள் சைவ வித்தியா அபிவிருத்தி சங்கத்தை தோற்றுவித்து நாவலரினதும் அருணாசலம் உபாத்தியா யரினதும் சைவத் தமிழ்ப் பணிகளைத் தொடர்ந்தார். அருணாசல உபாத்தியாயர் அவர்களின் சைவ ஆசிரிய கலாசாலைக் கனவு 1928 இல் இந்துபோட் இராசரத்தினத்தால் நிறைவேற்றப்பட்டது இது பின்னர் இன்றைய முத்துத்தம்பி மகா வித்தியாலயம் ஆக உருமாறியது.

சைவப் பாடசாலைகளை நிர்வகிப்பதற்கு அருணாசல உபாத்தியாயர் ஆரம்பித்த இந்து வித்தியா சங்கம் பின்னர் யாழ்ப்பாணம் இந்துசபை என்ற பெயரில் இயங்கி பல சைவத் தமிழ்ப் பணிகளை முன்னெடுத்தது. காரைநகரில் மல்லிகை என்னும் குறிச்சியில் சிற்றம்பலம் சங்கரப்பிள்ளை பத்தினியம்மாள் தம்பதி யினருக்கு 31/10/1864 அன்று வெள்ளிக்கிழமை இரவு பூராட நட்சத்திரத்தில் அருணாசலம் பிறந்தார்.ஆசான் அருணாசலம் தனது ஆரம்பக் கல்வியை களபூமி கிறிஸ்தவ பாடசாலையில் கற்றார்.

பின்னர் 5 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்ற அருணாசலம் தாமொரு பயிற்றப்பட்ட ஆசிரியராய் வரவேண்டும் என்ற ஆர்வத்தினால் தெல்லிப்பளையில் அமெரிக்க மிஷனரியால் நடாத்தப்பட்ட ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையில் பிரவேச வகுப்பில் சேர்ந்து கற்றுச் சித்திபெற்றார்.

பின்னர் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த போதும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியினரின் ஞானஸ்னானம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க மறுத்த காரணத்தால் அவரின் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழை

இழந்தது மட்டுமல்ல ஆசிரியப் பணி செய்வதற்கான சந்தர்ப்பத்தையும் இழந் தார் .எனினும் அப்போது பன்னாலையைச் சேர்ந்த உயர் நீதிமன்ற நீதிபதியாயும் சட்ட மன்ற உறுப்பினராயும் இருந்த அம்பலவாணர் கனகசபை என்ற பெரியவரின் தலையீட்டினால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் கிடைக்கப் பெற்று அக்கால வழக்கப்படி 1885 ல் திண்ணைப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து கல்விப் பணி ஆற்றினார்.

கால நேரம் கைகூடி வர நாகமுத்து என்பவரை திருமணம் செய்து மூன்று மகன்களைப் பெற்று மேலே கூறியது போல தமிழ்ப் பணியும் சைவப் பணியும் புரிந்து வந்தார் .இவ்வாறு தமிழ்ப் பணியும் சைவப் பணியும் புரிந்த அருமருந்து போன்ற அருணாசல உபாத்தியாயர் குமிழங்குளி என்ற குறிச்சியில் உள்ள தமது இல்லத்தில் 17-01 -1920 அன்று வெள்ளிக்கிழமை இரவு ஏகாதசி திதியில் ஈழத்துச் சிதம்பரனின் ஈடு இணையற்ற கழல்களைச் சேர்ந்தார் .



**Sir Ponnambalam Ramanathan**
(16 April 1851 – 26 November 1930)

Sir. Pon. Ramanathan was a Ceylon lawyer and politician who served as Solicitor-General of Ceylon and served in the Legislative Council of Ceylon for many decades.

Ramanathan founded two schools in Northern Province – Parameshwara College, Thirunelvely which became as the University of Jaffna and Ramanathan College Chunnakam.

At the request of Educational wellwishers Sir Pon. Ramanathan gave five acres of his land at Kopay called 'RAMANATHAN KALADDY' to established Jaffna Teachers' Training College in 1923. Later it became as Kopay Teachers' College



**Ubathiyayar Karainagar S. Arunasalam**
(31October1864 – 17 January1920)

Karainagar S. Arunasalam was a teacher followed Srilasri Arumuga Navalar's Path.

He founded a Teachers' Training College named KOPAY UNITED TEACHRS' COLLEGE. It was mainly founded for Teacher Education in a hindu environment. Unfortunately he died in 1920. The well-wishers and others tried to continue his foot steps and approached Sir Pon Ramanathan for help. With Sir Pon Ramanathan's contribution Kopay Teachers' College was founded in his donated land..

## Kopay Teachers' College Premier League போட்டிகளுக்கான வீரர்களை ஏலம் எடுத்தல் நிகழ்வு

**26.10.2023**கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால KTC Premier League போட்டிகளுக்கான இராவணன், கருடன், ஆதவன் ஆகிய அணிகளுக்காக விளையாடும் வீரர்களை ஏலம் எடுத்தல் நிகழ்வு கலாசாலையில் உடலாளர் மன்றத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலாசாலையின் அதிபர் ச.லலீசன், உடலாளர் மன்ற காப்பாளர் திருமதி க.அன்பரசி, பிரதிஅதிபர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.



கருடன் அணி



ஆதவன் அணி



இராவணன் அணி








## Kopay Teachers' College Premier League துடுப்பாட்ட நிகழ்வுகள்

**31.10.2023** K.P.L துடுப்பாட்டப் போட்டி ஆரம்பமானது. இதில் ஆதவன் அணி, இராவணன் அணி, கருடன் அணி என மூன்று அணிகள் பங்கேற்றன. இப்போட்டியானது மட்டுப்படுத்தப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களை கொண்டது. முதலாவதாக இராவணன் அணியை எதிர்த்து கருடன் அணி மோதியது. இப்போட்டியானது வெற்றி தோல்வி இன்றி சமனிலையில் முடிவடைந்தது. .

இதில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய கருடன் அணி 67/3 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இராவணன் அணி 67/4 என்ற அடிப்படையில் போட்டி சமனிலையில் முடிவடைந்தது.

தொடர்ந்து இரண்டாவது போட்டி இராவணன் அணியை எதிர்த்து ஆதவன் அணி மோதியது.இதில் துடுப்பெடுத்தாடிய ஆதவன் அணி 28/6 பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இராவணன் அணி 29/2 பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டது.







# நிகழ்வுகளின் தொகுப்பு

## முத்தமிழ் விழா—19.10.2023






















# வாணி விழா—25.10.2023























இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகக்கழகத்தினால் 01.11.2023 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது